# SC No.26/2019

13.02.2026

## PW 1

**திரு சின்னப்பா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்பவம் நடந்தது வலங்கைமான் மதிப்பு தெரு வீரப்பன் முதலியார் வீட்டின் எதிரில். இவ்வழக்கில் இறந்துபோன தினேஷ் மீது CC 5/2016 கும்பகோணம் நீதிமன்றத்தில் ஒரு சிலை திருட்டு வழக்கு நடந்தது என்றால் தவறு. தினேஷ் மீது பட்டீஸ்வரம் போலீசில் கு.எண் 60/2015 அருண் மற்றும் மனோஜ் என்பவர்களை கொலை செய்ய முயற்சி செய்ததாக வழக்கு நடந்தது என்றால் தவறு. இவ்வழக்கின் சாட்சிகள் குமரவேல் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் என் அக்காவின் மகன்கள் என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு அங்கு வந்த கார்த்தி நீ என்னடா சமாதானம் செய்வது என சொல்லி தன் முதுகு பக்கம் மறைத்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:52:33 +0530

வைத்திருந்த அருவாளை எடுத்து தினேஷை ஓங்கி வெட்டினான் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தவறு, சொல்லியிருக்கிறேன். அவ்வாறு தினேஷ் முதலில் வெட்டுப்பட்ட இடத்தில் தரையில் நிறைய இரத்தம் கொட்டிகிடந்தது. தினேஷ் முதலில் வெட்டுப்பட்ட இடத்திலிருந்து கிழக்கே ஓடியபோது வழியெல்லாம் இரத்தம் கொட்டி கிடந்தது. அவ்வாறு தினேஷ் ஓடியது சுமார் 100 மீட்டர் இருக்கும். அவ்வாறு தினேஷ் ஓடிய 2 பக்கங்களிலும் குடியிருப்பு வீடுகள் உண்டு என்றால் உண்டு. வீரப்பன் முதலியார் வீட்டிற்கு அக்கம் பக்கத்தில் நிறைய குடியிருப்புகள் உண்டு என்றால் உண்டு. அவ்வாறு அக்கம் பக்கத்தில் குடியிருந்த வீட்டுக்காரர்களுக்கும் இந்த சம்பவம் தெரியும். 3ம் எதிரி ஜெய்வீர் தினேஷை பிடித்துக் கொண்டார் என சொல்லியுள்ள சூழ்நிலையில் தினேஷை ஜெய்வீர் பின்பக்கமிருந்து முன்பக்கமாக பிடித்துக் கொண்டார். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள அங்கு நின்ற ராஜசேகரன் அருவாளை பிடுங்கி தினேஷின் வலது கை, வலது முட்டி, வலது பக்க வயிறு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டினான் என்ற விபரத்தை புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் தவறு, சொல்லியிருக்கிறேன். சம்பவ இடத்திலிருந்து வலங்கைமான் காவல் நிலையம் சுமார் ¼ கி.மீ. தொலைவு இருக்குமென்றால் இருக்கும்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:52:41 +0530

அதனால் சம்பவம் நடந்து சுமார் 10 நிமிட நேரத்தில் வலங்கைமான் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விட்டார்கள். அந்த இடத்திலேயே சம்பவம் நடந்து 10 நிமிட நேரத்தில் போலீசார் என்னையும் இவ்வழக்கின் மற்ற சாட்சிகளையும் விசாரித்து எழுதிக் கொண்டார்கள். அவ்வாறு எழுதிக் கொண்டதில் நான் படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அவ்வாறு நான் படித்துப் பார்த்து கையெழுத்து போட்டது சம்பவம் நடந்த இடத்தில் என்றால் ஆமாம். அ.சா.ஆ.1 யை நான் பதட்டத்தில் இருந்ததால் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்த ஒரு பையனை விட்டு எழுதச் சொன்னேன், அந்த பையன் பெயர் எனக்கு தெரியாது. அ.சா.ஆ.1 யை போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்தேன். அ.சா.ஆ.1 நான் சொல்லும் நாள், நேரத்தில் கொடுக்கப்பட்டதல்ல எனவும் பின்னால் வழக்கிற்கேற்ப பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் தவறு. தினேஷ் வெட்டுப்பட்டு கிடந்தபோது நான் தூக்க போனேன், அங்கிருந்த போலீசார் தூக்க கூடாது என சொல்லிவிட்டார். அவ்வாறு நான் தூக்க போய் போலீசார் தடுத்தது சம்பவம் நடந்த 5 / 10 நிமிடத்தில். இதே வழக்கு சம்பவத்தில் 6ம் எதிரி ஜெயராஜ், 7ம் எதிரி முத்தையனுக்கும் இதே வழக்கு சம்பவத்தில் கொடுங்காயங்கள் ஏற்பட்டன என்றால் இல்லை. அவ்வாறு கொடுங்காயங்கள் ஏற்பட்டன என்றும் அந்த கொடுங்காயங்களை ஏற்படுத்தியவர்கள்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:52:48 +0530

தற்போது இறந்துபோன தினேஷ் இவ்வழக்கின் 6 ம் சாட்சி பாலகுரு, 7 ம் சாட்சி அருண் மற்றும் பிரகாஷ், நெடுமாறன் ஆகியோர் என்று சொன்னால் தவறு. தினேஷ், பாலகுரு, அருண், பிரகாஷ், நெடுமாறன் ஆகியோர் இந்த வழக்கின் எதிரிகள் ஜெயராஜ் மற்றும் முத்தையனை பீர்பாட்டில், கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கி கொடுங்காயம் ஏற்படுத்தியதாக இவ்வழக்கின் 7 ம் எதிரி முத்தையன் வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கு.எண் 298/2015 கொலை முயற்சி வழக்க மேற்படி பாலகுரு, அருண், பிரகாஷ், நெடுமாறன் மீது இதே நீதிமன்றத்தில் SC No.79/2019 ஆக இதே நீதிமன்றத்தில் நடந்தது என்று சொன்னால் தவறு. காயம்பட்ட எதிரிகள் ஜெயராஜ், முத்தையன் தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று ஆபரேஷன் நடந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தினேஷ் இறந்துவிட்டதால் அவரை விட்டுவிட்டு கு.எண் 298/2015 என்ற எதிரிடை வழக்கில் 7 ம் எதிரி முத்தையனிடம் வலங்கைமான் போலீசார் புகாரை பெற்று அந்த வழக்கு நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த எதிரி ஜெயராஜ், எதிரி முத்தையன் தாக்கப்பட்ட கு.எண் 298/2015 வழக்கு சம்பவ கலவரத்தில்தான் தினேஷ் காயம்பட்டு இறந்து விட்டார் என்றால் தவறு. எதிரிகளுக்கும் தினேஷ் இறப்பிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையெனவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:52:55 +0530

எதிரிகள் யாரும் தினேஷை தாக்கவில்லை எனவும் சொன்னால் தவறு. வழக்கு சம்பவம் எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது எனவும் தினேஷ் இறந்த செய்தியை கேள்விபட்டு வலங்கைமான் அரசு மருத்துவமனை போய் நான் தினேஷை பார்த்தேன் என்று சொன்னால் தவறு. இறந்த தினேஷ் என் அக்கா பையன் என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:02 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

SC No.26/2019

13.02.2026

PW 2

**திரு கார்த்திக்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் இறந்த தினேஷ் என் பெரியப்பா பையன். நான் ஆட்டோ ஓட்டி கொண்டிருந்த ஆட்டோ ஸ்டாண்ட் சம்பவ இடத்திலிருந்து 20 அடி தூரம் இருக்கும். அ.சா.1 என் மாமா. அ.சா.5 என் சின்னம்மா பையன். நான் முன் விசாரணையில் சொன்ன கார்த்தி விரட்டிய தூரம் 30 அடி தூரம் இருக்கும். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள ஜெய்வீர், ராஜசேகர், அரவிந்த், முத்தையன் ஆகியோர் தினேஷை பிடித்துக்கொள்ள என்பது மேற்படி நால்வரும் பின்னால் நின்று முன்பக்கமாக பிடித்துக் கொண்டார்கள். என் மீது கபிஸ்தலம் போலீசில் கு.எண் 786/2021 ஒரு கொலை வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றால் ஆமாம். காயம்பட்டு கிடந்த தினேஷை நான் தூக்கவில்லை. இதே வழக்கு சம்பவத்தில் 6ம் எதிரி ஜெயராஜ், 7ம் எதிரி முத்தையன் ஆகியோருக்கு பீர் பாட்டில், கத்தி போன்றவற்றால் தாக்கப்பட்டது பற்றி எனக்கு தெரியாது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:11 +0530

இதே வழக்கு சம்பவத்தில் இறந்து போன தினேஷ், சாட்சி பாலகுரு, அருண், பிரகாஷ், நெடுமாறன் ஆகியோர் 6ம் எதிரி ஜெயராஜ், 7ம் எதிரி முத்தையன் ஆகியோரை பீர் பாட்டில், கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கி கொடுங்காயம் ஏற்பட்டதாக 7ம் எதிரி முத்தையன் வலங்கைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து கு.எண் 298/2015 வழக்கில் SC No.79/2019 என்ற நம்பரில் வழக்கு நடந்தது எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை சம்பவம் நடந்த இடம், நாளிலேயே இரவு 10.30 முதல் 11.00 க்குள் விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்பவம் எப்படி நடந்தது என்றே எனக்கு தெரியாது எனவும் கு.எண் 298/2015 என்ற எதிரிடை வழக்கில் 7ம் எதிரி முத்தையன் கொடுத்த வலங்கைமான் புகாரின் அடிப்படையில் நடந்த வழக்கு சம்பவ கலவரத்தில்தான் தினேஷ் காயம்பட்டு இறந்துவிட்டார் எனவும் எதிரிகளுக்கும் தினேஷ் இறந்ததற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றும் எதிரிகள் யாரும் தினேஷை தாக்கவில்லை என்றும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:19 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

SC No.26/2019

13.02.2026

PW 3

**திரு ராஜா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).

**குறுக்கு விசாரணை**

என்னுடைய ஊர் விருப்பாச்சிபுரம். விருப்பாச்சிபுரத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ¼ கி.மீ. தொலைவு இருக்கும். இந்த வழக்கில் இறந்த தினேஷ் என்னுடைய அக்கா பையன். கார்த்தி, தினேஷை விரட்டியதாக நான் முதல் விசாரணையில் சொல்லியிருப்பது சுமார் 4 அடி தூரம் இருக்கும். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள ஜெய்வீர், ராஜசேகர், அரவிந்த், முத்தையன் ஆகியோர் தினேஷை பிடித்துக்கொண்டது முன்பக்கம் நின்று பிடித்துக்கொண்டு பின்பக்கம் வெட்டினார்கள். என் மீது எந்த வழக்கும் கிடையாது. போலீசார் சம்பவ இடத்திற்கு ¼ மணி நேரம் கழித்து வந்தார்கள். எதிரிகள் சம்பவம் நடந்து முடிந்தபிறகு அங்கிருந்து மேற்கு பக்கமாக ஓடிவிட்டார்கள். போலீசார் வருவதற்கு முன் நாங்கள் தினேஷை தூக்க முயற்சி செய்யவில்லை. தினேஷ் இறந்துவிட்டதால் அவரை விட்டுவிட்டு கு.எண் 298/2015

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:27 +0530

என்ற எதிரிடை வழக்கில் 7ம் எதிரி முத்தையனிடம் வலங்கைமான் போலீசார் புகாரை பெற்று அந்த வழக்கு நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த எதிரி ஜெயராஜ், எதிரி முத்தையன் தாக்கப்பட்ட கு.எண் 298/2015 வழக்கு சம்பவ கலவரத்தில்தான் தினேஷ் காயம்பட்டு இறந்து விட்டார் என்றால் தவறு. எதிரிகளுக்கும் தினேஷ் இறப்பிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையெனவும் எதிரிகள் யாரும் தினேஷை தாக்கவில்லை எனவும் சொன்னால் தவறு. வழக்கு சம்பவம் எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது எனவும் தினேஷ் இறந்த செய்தியை கேள்விபட்டு வலங்கைமான் அரசு மருத்துவமனை போய் நான் தினேஷை பார்த்தேன் என்று சொன்னால் தவறு. இறந்த தினேஷ் என் அக்கா பையன் என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:34 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

SC No.26/2019

13.02.2026

PW 4

**திரு ராஜேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).

**குறுக்கு விசாரணை**

தினேஷை, கார்த்தி விரட்டினாரா என்பதை நான் பார்க்கவில்லை. நான் இந்த வழக்கில் தினேஷ் இறந்து கிடந்ததைதான் பார்த்தேன். அதனால் எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:51 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

## SC No.26/2019

13.02.2026

**PW 5**

**திரு குமரவேல்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**(A1, A2, A4, A6, A7 are present. A5 died. A3 Split-up in SC 147/2025).**

**குறுக்கு விசாரணை**

அ.சா.4 ராஜேந்திரன் என்னுடைய தகப்பனார். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியும். கபிஸ்தலம் காவல் நிலைய கு.எண் 786/2021 வழக்கில் இவ்வழக்கின் சாட்சி 2 டன் நானும் ஒரு குற்றம் சாட்டப்பட்டவராக உள்ளேன். நான் போலீசார் விசாரணையில் ஆட்டோ டிரைவராக வேலை பார்ப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. இந்த வழக்கில் இறந்துபோன தினேஷ் என் பெரியம்மா மகன். அ.சா.1 என் மாமா. அ.சா.2 எனக்கு உறவு முறையில் அண்ணன். தினேஷை கார்த்தி முன் விசாரணையில் சொன்னதுபோல் விரட்டிய தூரம் 30 அடி தூரம் இருக்கும். முன் விசாரணையில் நான் சொன்ன எதிரிகள் தினேஷை முன்னாள் நின்று பிடித்துக் கொண்டார்கள். நான் தினேஷை தூக்கினேன். தினேஷை நான் தூக்கியதுபோது அவர் மீது இருந்த இரத்தம் என் உடையில் பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடத்திலேயே இரவு சுமார்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:53:58 +0530

10.45 மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். தினேஷ் இறந்துவிட்டதால் அவரை விட்டுவிட்டு கு.எண் 298/2015 என்ற எதிரிடை வழக்கில் 7ம் எதிரி முத்தையனிடம் வலங்கைமான் போலீசார் புகாரை பெற்று அந்த வழக்கு நடைபெற்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த எதிரி ஜெயராஜ், எதிரி முத்தையன் தாக்கப்பட்ட கு.எண் 298/2015 வழக்கு சம்பவ கலவரத்தில்தான் தினேஷ் காயம்பட்டு இறந்து விட்டார் என்றால் தவறு. எதிரிகளுக்கும் தினேஷ் இறப்பிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லையெனவும் எதிரிகள் யாரும் தினேஷை தாக்கவில்லை எனவும் சொன்னால் தவறு. வழக்கு சம்பவம் எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது எனவும் தினேஷ் இறந்த செய்தியை கேள்விபட்டு வலங்கைமான் அரசு மருத்துவமனை போய் நான் தினேஷை பார்த்தேன் என்று சொன்னால் தவறு. இறந்த தினேஷ் என் அக்கா பையன் என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்ததுபோல் பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.02.13 14:54:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.